நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.288/2020

## P.W. 7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கலாவதி |
| தந்தை / கணவர் பெயர் | : | சின்னுசாமி |
| கிராமம் | : | நவப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 7** |
| வயது | : | 53 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 09–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**3 ம் எதிரி ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.25PM)

1. நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.11.2019 ம் தேதி பிற்பகல் 16.00 மணிக்கு மேட்டூர் மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பொறுப்பில் இருந்தேன். கொளத்தூர் கீழ் மூலப்பாதையூரை சேர்ந்த கார்த்தி

மனைவி 21 வயதுள்ள இளவரசி என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான புகார் ஒன்றினை 16.11.2019 ம் தேதி கொடுத்தார்.அதனை பெற்று நிலைய குற்ற எண்.5/2019, ச.பி. 147, 294(பி),498(A), 494, 109 இ.த.ச வின் கீழ் எதிரிகள் கார்த்திக், சரவணன், ராணி, மைதிலி, சுப்ரமணி, லதா, சக்திவேல் மற்றும் பாலா ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன்.**(முதல் தகவல் அறிக்கை அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. முதல்தகவல் அறிக்கையின் அசலை வாதியின் எழுத்துபூர்வமான புகாலுருடன் இணைத்து கனம் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன்விசாரணைக்காக மேட்டுர் அனைத்து மகளிர் காவல் நிலைய பொறுப்பில் இருந்த ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகாரில் புகார்தாரர் குறிப்பிட்ட முகவரியில் வசித்து வந்ததாக தான் குறிப்பிட்டுள்ளார் என்றாலும், அவருடைய அப்போதைய முகவரியை குறிப்பிடவில்லை என்றாலும், அவருடைய சரியான முகவரி எனக்கு தெரியாது என்றாலும் அவர் அந்த முகவரியில் இருப்பதாகத்தான் என்னிடம் சொன்னார்.

2. என்னிடம் கொடுக்கப்பட்ட புகாரின் உள்ளடக்கத்தில் குறிப்பிடப்பட்ட கொளத்தூர் காவல் நிலைய புகா இரசீது எனக்கு கொடுக்கப்பட்ட புகாருடன் இணைத்து கொடுக்கப்படவில்லை. சரியாக முன் விசாரணை செய்யாமல் கொடுக்கப்பட்ட தவறான புகாரின் பேரில் நான் வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரை சரியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**
விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(04.34PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**